**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு ஜுன் மாதம் 09-ம் தேதி மனுதாரர் தரப்பு சாட்சி ம.சா.1-ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.ஜி.அசோக் பிரசாத், பி.ஏ., பி.எல்., எம்.எஸ்.இ.என்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நி.வே.இ.ம.எண். 2/2023 இல் நி.வே.ம.எண்.154/2006

ம.சா.1 எஸ்.பி.தாமோதரன்

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

1. நான் PUC வரை படித்துள்ளேன். ஈரோடு ஸ்பின்னிங் மில்ஸ் நிறுவனத்தை கடந்த 1980ம் ஆண்டு முதல் நடத்தி வருகிறேன். எங்கள் நிறுவனம் சார்பாக இதுவரை எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை. நீதிமன்ற நடவடிக்கைகள் சம்மந்தமாக எனக்கு ஓரளவு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள மனுவிலும் மற்றும் பிரமாண வாக்குமூலத்திலும் For Erode Spinning Mills Managing Director என்று சீல் வைத்து தான் கையெழுத்து போட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

2. தற்போது ஜப்தியிலுள்ள மனு சொத்தானது ஆரம்பத்தில் ஈரோடு ஸ்பின்னிங் மில்ஸ் நிறுவனத்துக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். நிறைவேற்று மனுவில் என்னுடைய எதிர்உரையை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். இந்த மனுவில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் புகைப்பட நகல்கள் என்றால் சரிதான். இந்த ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

3. எனது சகோதரர் என்னை ஏமாற்றிவிட்டதாக சொல்லியுள்ள நிலையில் திரு.எம்.ஜெகநாதன், வழக்கறிஞர் மூலம் வழக்கு விவரங்களை தெரிந்துகொண்டு அவர்மீது எவ்வித நீதிமன்ற நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். ஈரோடு ஸ்பின்னிங் மில்ஸ் நிறுவனம் வாங்கிய கடனுக்கு அந்த நிறுவனம் தான் பொறுப்பு என்று சொன்னால் சரியல்ல. நிறைவேற்று மனுவில் எதிர்உரை தாக்கல் செய்துவிட்டு தற்போது வழக்கை

காலதாமதப்படுத்துவதற்காக இந்த மனுவை தாக்கல் செய்து பொய்யாக வழக்காடி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.